நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்
17 OCT 2008
சென்னை-600 005

2

**சுருக்கம்**

பணியமைப்பு – நகராட்சி நிர்வாகம் – நகராட்சிகளில் பணிபுரியும் அனைத்து கடைநிலை ஊழியர்களுக்கு ஓய்வு பெறும் வயது 60 ஆக நிர்ணயித்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நடீ1) துறை

அரசாணை(நிலை) எண்.202 நாள் 16.10.2008.

படிக்க

1. அரசாணை(நிலை) எண்.263, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 06.10.1994.
2. அரசு கடித எண்.7149/நடீ3/02–2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03.07.2000.
3. அரசு கடித எண்.19484/நடீ2/04–4, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 17.12.2005.
4. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிப்பேராணை வழக்கு (எம்டி) எண்.1771/07 தீர்ப்பு நநாள் 19.04.2007.
5. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிப்பேராணை வழக்கு (எம்டி) எண்.200/07 தீர்ப்பு நநாள் 12.06.2007.
6. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.11396/07/எப்1, நாள் 20.06.2007.

---

**ஆணை –**

நகராட்சிகளில் பணிபுரியும் கடைநிலை ஊழியர்கள் 2 வகைகளாக பணியமர்த்தப்படுகின்றனர். அதாவது, அலுவலக உதவியாளர், துப்புரவு பணியாளர் போன்ற கடைநிலை ஊழியர்கள், நேரடி நியமனம் மூலம் வேலை வாய்ப்பகம் மூலம் பட்டியல் பெற்று சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்களால் நியமனம் செய்யப்படுகின்றனர். இவர்களுக்கு ஓய்வு பெறும் வயது 60 ஆகும். நகராட்சிகளில் தினக்கூலிகளாகப் பணியமர்த்தப்பட்டு, பின்னர் அரசாணைகள் மூலம் நகராட்சிகளில் நுழைவுநிலை பணியிடங்களான இளநிலை உதவியாளர் பணியிடங்களிலும் மற்றும் அலுவலக உதவியாளர், துப்புரவு பணியாளர் போன்று கடைநிலை ஊழியர்களாகவும் நிரந்தரமாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் அரசாணை(நிலை)எண்.263, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 06.10.1994–ல் தினக்கூலிகளாக பணிபுரிந்து பின்னர் கடைநிலை ஊழியர்களாக நிரந்தரப் பணியிடத்தில் பணியமர்த்துவது அவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகையாகும் என்றும், முறையாக பணியமர்த்தப்பட்ட பணியாளர்களுக்குண்டான பணிப்பயன்களை பெற இவர்கள் தகுதியற்றவர்கள் என்றும் எனவே, இவர்களுடைய ஓய்வுபெறும் வயது 58 என்றும் நிர்ணயித்து ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, இந்த அரசாணைப்படி தினக்கூலிகளாக இருந்து பின்னர் கடைநிலை ஊழியர்களாக நிரந்தரமாக நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு ஓய்வு பெறும் வயது 58 ஆகும்.

2. தென்காசி நகராட்சியில் தினக்கூலியாக பணிபுரிந்து பின்னர் தோட்டக்காரராக நிரந்தரமாக நியமிக்கப்பட்ட திரு. பண்டாரம் என்பவர் மேற்காணும் அரசாணைபடி 58 வயது முடிந்ததும் வயது முதிர்வு காரணமாக 30.06.2005–ல் ஓய்வுபெற அனுமதிக்கப்பட்டார். இவ்வாறு ஓய்வுபெற அனுமதித்ததை எதிர்த்து தனியர் சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை பெஞ்சில் வழக்கு தொடுத்தார். வழக்கில் தனியருக்கு

சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத் தீர்ப்பாணையில் கடைநிலை ஊழியர் பணியில் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் ஓய்வு பெறும் வயதினை இரண்டு வகைகளாக பிரித்ததற்கு பணிவிதிகளில் திருத்தம் செய்யவில்லை என தெரிவித்து இவரை ஓய்வு பெற அனுமதித்த நகராட்சி ஆணையரின் ஆணையினை ரத்து செய்து மனுதாரரை மீளவும் பணியில் அமர்த்துமாறும், மனுதாரர் ஓய்வு பெறும் வயதை(60 வயது) அடையும் வரை ஊதியத்துடன் கூடிய மற்ற பணிக்காலப் பயன்களும் பெறத் தகுதியுடையவர் என்றும், எதிர்மனுதாரர் தீர்ப்பாணை கிடைக்கப் பெற்ற இரண்டு வாரங்களுக்குள் இதனை நடைமுறைப்படுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. மேல்முறையீட்டு மனு ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்து 12.06.2007–ல் தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது. எனவே, நீதிமன்ற ஆணைக்கிணங்க தினக்கூலிப் பணியாளர்களாக இருந்து கடைநிலை ஊழியர்களாக நிரந்தரமாக நியமனம் செய்யப்பட்டவர்களின் ஓய்வு பெறும் வயது 58 என வெளியிடப்பட்ட அரசாணை எண்.263, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 06.10.1994 மற்றும் இது குறித்து வழங்கப்பட்ட 2 அரசு கடிதங்களையும் ரத்து செய்யுமாறும், அனைத்து கடைநிலை ஊழியர்களுக்கும் ஓய்வு பெறும் வயது 60 என நகராட்சி பணிவிதிகளுக்கு திருத்தம் வெளியிடுமாறும் நகராட்சி நிர்வாக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டது. நகராட்சியில் கடைநிலை ஊழியர் பணியில் வேலை வாய்ப்பகம் மூலம் நியமனம் செய்யப்படுபவர்களின் ஓய்வு பெறும் வயது 60 ஆகும். ஆனால், தினக்கூலிப் பணியாளர்களாக இருந்து பின்னர் கடைநிலை ஊழியர்களாக நிரந்தரமாக நியமனம் செய்யப்படுபவர்களின் ஓய்வு பெறும் வயது 58 ஆகும். ஒரே நிலையில் வேலை பார்க்கும் ஊழியர்களுக்கு, இரண்டு விதமான ஓய்வு பெறும் வயது நடைமுறையில் உள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட திரு. பண்டாரம் என்பவர் தொடுத்த வழக்கில் அவருக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

4. மேற்கூறிய சூழ்நிலையில், தென்காசி நகராட்சியின் தோட்டக்காரர், திரு. தி. பண்டாரம் அவர்களை 60 வயது வரையில் பணிபுரிய அனுமதிக்கலாம் என்றும், மேலும் தினக்கூலிப் பணியாளர்களாக இருந்து பின்னர் கடைநிலை ஊழியர்களாக நிரந்தரமாக பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் ஓய்வுபெறும் வயது 60 என நிர்ணயித்து ஆணை வெளியிடக் கோரும் நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை ஏற்று அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. இது தொடர்பாக தமிழ்நாடு நகராட்சி கடைநிலை ஊழியர் பணி விதிகளுக்கு தக்க திருத்தம் வெளியிட செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, குறளகம், சென்னை – 600 108.
மாநில கணக்காயர், சென்னை–18.
அனைத்து நகராட்சிகளின் மண்டல இயக்குநர்கள்.
<u>நகல்</u> – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.நா.2, ந.ப.3, மா.ந.1, மா.ந.3, மா.ந.4, மா.ந.5) துறை, செ
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்